*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p249-255** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# ஆதனின் பொம்மைசிறுகதை காட்டும் தொல்லியல் கூறுகள்

## Archaeological Elements Reflected in the Short Story Aathan's Toy

**S. Rajeswari*,**
*Research Scholar, Department of Tamil,*
*Kalasalingam Academy of Research and Education,*
*Krishnankovi, Viruthunagar -626126*
*Email: rajeswarikungumaraj123@gmial.com*
**Dr. C. Sangeetha,**
*Research Supervisor, Assistant Professor of Tamil,*
*Kalasalingam Academy of Research and Education,*
*Krishnankovi, Viruthunagar -626126*
**Dr. J. Vidhya,**
*Co-Supervisor, Assistant Professor of Tamil,*
*SSM College of Arts and Science,*
*Dindigul – 624002.*
*Email: thendralkumar2711@gmail.com.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 01-08-2026

*Corresponding Author Email:
*rajeswarikungumaraj123@gmial.com*

**Abstract:** The short novella “Aathanin Bommai” (Aathan’s Toy) depicts an ancient manner of living. Readers can see different archaeological elements related with the Indus Valley Civilization in this narrative, including excavated potsherds, coins, ceramics, and seals. The story emphasizes the Indus Valley people’s egalitarian thinking, civilization, culture, economy, technology, language, ethnicity, history, and antiquity, as well as the lifestyles and moral principles that their forefathers practiced. It also features children’s clay toys, cultural expression, artistic sensitivities, and craftsmanship. References to bead necklaces, coral-set rings, jewelry, pearls, old dietary habits, trade and commerce symbols, ancient architecture, and technical breakthroughs add to the archaeological theme. Thus, the short novella Athan’s Toy provides a wealth of archaeological, historical, and cultural insights into ancient life.

**Keywords:** *Tamil Literature,Children’s literature, udhayasankar, Aathanin Bommai-Shot Story.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

ஆதனின் பொம்மை என்னும் சிறுகதை தொன்மையான வாழ்க்கை முறையினை எடுத்துரைக்கக்கூடிய கதையாக உள்ளது. இக்கதைகளில் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டஓடுகள், நாணயங்கள், மண்பாண்டங்கள், முத்திரைகள், சிந்துவெளிமக்களின்சமத்துவசிந்தனைகள், நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், தொழில்நுட்பம், மொழி, இனம், வரலாறு, தொன்மம், தம்முன்னோர்கள் கடைப்பிடித்த வாழ்வியலையும் ஒழுக்கங்களையும் சிறுவருக்கானமண் பொம்மைகள், கலாச்சார வெளிப்பாடுகள், கலையுணர்வு, கைவினைத்திறன், பழங்காலமக்கள்பயன்படுத்திய மணிமாலைகள், தண்டட்டிகள், முத்துக்கள், பழங்கால உணவுமுறைகள்வணிகம் சார்ந்தகுறியீடுகள், பழங்காலக்கட்டிடக்கலைகள் தொழில்நுட்பமேம்பாடு போன்ற தொல்லியல் சார்ந்த சிந்தனைகள்ஆதனின் பொம்மைஎன்னும் சிறுகதையில் காணமுடிகிறது.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரிசையில் குழந்தை இலக்கியம் அல்லது சிறார் இலக்கியம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. சிறார்களின் மனநிலைக்கு ஏற்றவாறும், அவர்களுடைய அறிவுத்திறனுக்கேற்பவும் படைக்கப்படும் சிறுகதைகள், புதினங்கள், குழந்தைகளுக்கான பாடல்கள், அறம் சார்ந்த கதைகள், வரலாற்றுக் கதைகள், மற்றும் அறிவியல் கதைகள் ஆகியவற்றைக் குழந்தை இலக்கியங்களாகக் கருதுவர்.இந்த வகையான இலக்கியங்கள் சிறார்களுக்குப் பொழுதுபோக்கு இலக்கியங்களாக மட்டுமல்லாமல் நமது மொழி, வரலாறு, சமூகம், பண்பாடு, மரபு, நாகரீகம், சமத்துவம், போன்ற செய்திகளை உள்ளடக்கியதாகவும் காணப்படுகிறது. இந்த வகையில் தொல்லியல் சார்ந்த கதையாகப் பேசப்படுவது "ஆதனின் பொம்மை" என்னும் சிறுகதையாகும்.

சிறார் எழுத்தாளரான உதயசங்கரின் "ஆதனின் பொம்மை"எனும் கதையில் மொழி, இனம், பண்பாடு, பழக்கவழக்கம், சமத்துவம், நாகரிகம், வரலாறு, தொன்மம், வணிகம், கட்டிடக்கலை ஆகிய தொல்லியல் சார்ந்த செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இச்சிறுகதை தமிழர்களின் தொன்மையான வாழ்க்கை முறையினையும் , தொல்லியல் சான்றுகளையும் நுட்பமாக வெளிப்படுத்துகின்றது. இக்கதையில் இடம்பெறும் சில முக்கியமான தொல்லியல் கூறுகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிறார் என்பதற்கான விளக்கம்**

சிறார் என்பது சிறுவர்கள் அல்லது குழந்தைகளைக் குறிக்கும் சொல்லாகும்.சிறு+அவர்=சிறுவர் என அழைக்கலாம். சிறு என்பது குறைந்த எனப் பொருள் தருவதாகவும் அவர் என்பது ஆண், பெண் இருவரையும் குறிக்கும் பன்மைச் சொல்லாகவும் உள்ளது. இதனால் சிறார் என்னும்

இச்சொல் குறைந்த வயதுடைய அதாவது 12 வயதிற்குட்பட்ட இளம் பருவத்தினரைக் குறிக்கின்றது. சிறுவரைக் குறிக்கின்ற சிறார் என்ற இச்சொல்லைக் குழந்தைகள் என்று வீரமாமுனிவரின் சதுர கராதி குறிப்பிடுகின்றது[1] எனவே சிறுவர் என்னும் இச்சொல் சிறு குழந்தைகளைக் குறிப்பதாக நம்மால் அறிய முடிகின்றது. "நமது தமிழ் இலக்கியங்களும் சிறுவர்களைப் பற்றிக் குழந்தைகள்"என்றே குறிப்பிடுகின்றன.

**தொல்லியல் என்பதற்கான விளக்கம்**

தொல்+இயல்=தொல்லியல் என்று கூறலாம். தொல் என்னும் சொல்லானது பழமையையும், தொன்மையையும் குறிப்பனவாக உள்ளன. இயல் என்னும் சொல்லானது இயம்புதல் அல்லது ஆராய்தல் என்னும் பொருளில் உள்ளது. தொன்மை பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடும் பொழுது"தொன்மை தானே சொல்லும் காலை உரையோடு புணர்ந்த பழமை மேற்றே "[2] என்று குறிப்பிடுவதனால் தொன்மை என்னும் சொல் பழமை என்னும் பொருளில் வருவதை நம்மால் அறிய முடிகின்றது. எனவே தொல்லியல் என்னும் சொல்லானது பழைய வாழ்வியல் வரலாற்றைப் பற்றி எடுத்துரைக்கின்றது.

**தொன்மை மொழிக் கூறுகள்**

சிந்து சமவெளி நாகரிகம் என்பது பழந்தமிழரின் நாகரிகமாகக் கருதப்படுகின்றது. சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஓடுகளில் உள்ள எழுத்துக்கள் தற்காலத் தமிழ் எழுத்துக்கள் போல் அல்லாமல் கோடு கோடான வரி வடிவ முறையில் உள்ளதை"ஆதனின் பொம்மை" எனும் சிறுகதையில் அறிய முடிகின்றது. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஓடுகள், நாணயங்கள், மண்பாண்டங்கள் போன்றவற்றில் இருந்த குறியீடுகள் மூலம் என்ன மாதிரியான செய்திகள் கூறப்பட்டிருக்கின்றது என்பதை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதைப்பற்றிப்படித்திருந்தான். இந்தக் கதையில் வரும் ஆதன் கூறுவதை வைத்துப் பார்க்கும் பொழுது சிந்துவெளிக் குறியீடுகள் தமிழின் மூதாதையா?. ஒவ்வொரு மொழியும் முதலில் குறியீடுகளாகவே பிறந்தன என்று பாலு படித்திருந்தான். அப்படியானால் தமிழர்கள் சிந்து சமவெளி மக்களின் வழித்தோன்றல்களா?."என்ன எழுதியிருக்கு? என்று ஆதனிடம் அவன் கேட்டான். ஆதன் பாலுவின் கையைப் பிடித்துக் கொண்டே எங்கள் முன்னோரின் மொழிபாலு... தமிழின் முதல் வடிவம்... என எழுதி இருக்கிறேன் என என்று புரிந்து கொள்ள முடிகின்றதா?. நாங்கள் இங்கு வருவதற்கு முன்னால் வாழ்ந்த இடத்தின் பெயர் சிந்து…"[3] எனக் குறிப்பிடுவதைச் சிந்து சமவெளி பற்றிய தொல்லியல் சான்றாக உள்ளதை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் சிந்துவெளி எழுத்துமுறை பற்றி அகழ்வாராய்ச்சி செய்தவர்கள் கூறும் பொழுது "சிந்து சமவெளி மக்கள் இங்கு கிடைத்த முத்திரைகள், நாணயங்கள் முதலியவற்றின் மீது எழுதிய அளவோடு நின்று விட்டனர் என்று கருதுதல் தவறு. அவர்கள் அழியும் இயல்பினவான பல்வேறு பொருட்கள் மீதும் எழுதி வந்தனர் என்று கூறுவதே

பொருத்தமானதாகும்"[4] என்பதைச் சிந்துவெளி எழுத்துக்கள் பற்றி மா.இராசமாணிக்கனார் கூற்றால் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**சிந்துவெளி மக்களின் சமத்துவ சிந்தனைகள்**

தற்கால சமூகத்தில் மக்கள் பல்வேறு வகையான ஏற்றத்தாழ்வுகளோடு வாழ்கின்ற முறையைப் பார்க்க முடிகின்றது. ஆனால் சிந்துவெளி மக்கள் ஒரு குழுவாகவோ ஒரே இனமாகவோ வாழ்கின்ற வாழ்வியலைப் பார்க்கும் பொழுது"அப்படியா சொல்கிறாய்? ஆச்சரியமாக இருக்கின்றது அவரவருக்கு எந்தெந்தத் தொழில் விருப்பமோ அதைச் செய்யலாம். அதில் என்ன தடை? இங்கே ஆதி காலத்திலிருந்து அப்படித்தான் ஒரே குடும்பத்தில் குயவர், தச்சர், வேளாளர், நகர சுத்தி, கொல்லர், வலைஞர், மருத்துவர் என்று எல்லோருமே இருப்பார்கள்.தொழிலில் என்ன பேதம் இருக்கிறது?"என்று வெள்ளந்தியாகக் கேட்டான் ஆதன். இதனைக் கேட்ட பாலுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.[5]என்று எழுத்தாளர் குறிப்பிடுவதிலிருந்து சிந்துவெளி மக்கள் வேற்றுமை இல்லாமல் ஓர் இனமாகவும், ஒன்றாகவும் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

இதனையே"பிறப்பொக்கும் எல்லாம் உயிருக்கும்"[6] என்ற குறளின் வழி செய்கின்ற தொழிலில் தான் வேற்றுமை, பிறப்பில் வேற்றுமை இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**அகழாய்வுச் சான்றுகள்**:

மண்ணில் புதைந்துள்ள பழங்காலப் பொருட்கள் மற்றும் எச்சங்களை அறிவியல் பூர்வமாக அகழ்ந்து எடுப்பதே அகழாய்வு எனப்படும். வரலாற்றுக்கு முந்தைய மற்றும் சங்க கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகியவற்றை அறிந்து கொள்ள இந்த அகழாய்வுச் சான்றுகள் முக்கியமானவை. இந்த ஆய்வுகள் தொல்லியல் ஆய்வின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

**மண் பொம்மைகள்**

சங்க காலம் மற்றும் அதற்கு முந்தைய காலகட்டங்களில் குழந்தைகள் விளையாடிய பொம்மைகள் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் காலத்தை ஆராயும் பொழுது அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆதனின் பொம்மை என்பது சுடுமண்ணால் செய்யப்பட்ட சுடுமண் பொம்மையாகும்.

**பழங்காலப் பொருட்கள்**

ஆதனின் பொம்மை என்ற இக்கதையில் மக்கள் வாழ்ந்த இடங்கள், வீட்டினுடைய அமைப்புக்கள், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் போன்றவை கதையில் குறிப்பிடப்படுகின்றன. மேலும் இக்கதையில் விளையாட்டுப் பொருட்கள் மூலம் குழந்தைகளின் வாழ்க்கை முறை பண்பாட்டுக் கூறுகள் மற்றும் குடும்ப அமைப்புகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்களின்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.21**

கலையுணர்வு, அவர்களின் கைவினைத் திறன் போன்றவற்றால் தமிழர்களின் சிறப்புகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

**அணிகலன்கள்**

பழங்கால மக்கள் பயன்படுத்திய மணிமாலைகள், சூது பவளம் பதித்த மோதிரங்கள், தண்டட்டிகள் மற்றும் முத்துக்கள் போன்றவற்றைப் பார்க்கும் பொழுது அக்கால மக்களின் கலைநயத்தை நுட்பமாகஅறிந்து கொள்ள முடிகின்றது.

**உணவு வகைகள்**

பழங்கால மக்கள் ஊன்சோறு, அப்பம்,அதிரசம், இனிப்புகள், பானகம், தேனும் தினைமாவும், புட்டும் பழமும் சாப்பிட்டனர் என்பதை இக்கதையின் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு மக்கள் இயற்கையோடு இயைந்து இன்பமான வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதை இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகின்றது.

**வணிகமும் வாழ்வியலும்**

சங்ககாலம் தொட்டுத் தமிழகத்தில் வணிகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அயல்நாட்டு வணிகர்கள் இங்கு வணிகத்திற்காக வந்து சென்ற வரலாற்றுச் செய்தியினை அறிகிறோம். அதன் அடிப்படையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் சிந்துவெளியில் வாணிபம் செய்வதைச் சிறார் இலக்கியமான "ஆதனின் பொம்மை'' என்னும் சிறுகதை எடுத்துரைக்கும் பொழுது சுமேரியர்கள், யவனர்கள், கிரேக்கர்களின் நாவாய்கள் கூட்டம் போன்றவற்றைக் கொற்கையில் பார்க்க முடியாது. தொண்டியில் இருக்கும் யவனர் குடியிருப்புகளில் உள்ள குழந்தைகளுடன் விளையாட முடியாது. வஞ்சியில் நடக்கும் நாடகங்களைப் பார்க்க முடியாது. கலைகளின் கூடமான நான்மாடக் கூடலில் நடக்கும் நடனங்களைக் கண்டுகளிக்க முடியாது. பெரியவர்களுக்குக் கடுந் தேறலும், இளைஞர்களுக்கு இளந்தேறலும் வழங்கும் தேறல் அங்காடிகளைப் பார்க்க முடியாது.[7] அந்த அளவிற்கு அயல்நாட்டு வணிகர்கள் வணிகம் செய்திருக்கிறார்கள் என்பதை இவ்வாசிரியரான உதயசங்கர் தனது கதையில் எடுத்துரைப்பதன் மூலம் சிந்துவெளியின் வணிகச் சிறப்பினைப் பற்றியும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் இச்செய்தி குறித்து மா. இராசமாணிக்கனார் கூறும்பொழுது எகிப்தில் உள்ள பிரமிடு கோபுரங்களாகிய அரசர் சவக்குழிகளில் பெண் உருவங்கள் செதுக்கப்பட்ட நன் மணிகள் பல கிடைத்துள்ளன. அவை இறந்தவர்களின் மனைவியரைக் குறிப்பன. இறந்த மனைவியர் மறுபிறப்பில் தம் கணவரைக் கூடி வாழ்வர் என்பது பண்டைய கால எகிப்தியர்களின் எண்ணம். அந்த எண்ணங்கள் சிந்துவெளியிலும் சுமேரியாவிலும் இருந்ததாகத் தெரிகின்றது."[8] என்று குறிப்பிடுவதிலிருந்து சிந்துவெளியில் நடைபெற்ற வணிகத்தினை நம்மால் உறுதி செய்ய முடிகின்றது.

**சிறார் இலக்கியத்தில் கட்டிடக்கலை**

சிறார் எழுத்தாளர்கள் தனது கதைகளில் தொல்லியல் சார்ந்த சிந்தனைகளைப் பதிவு செய்கின்ற பொழுது அம் மக்களின் வாழ்வியல் செய்திகளையும் பதிவு செய்கின்றார்கள். அந்த வகையில்

மக்களின் வாழ்வியல் இடங்களான கட்டிடக்கலை பற்றியும் கூறுகின்றனர். அவ்வாறு கூறும் பொழுது சிந்துவெளி மக்களின் கட்டிடக்கலை வெளிப்படுகின்றது. இதனை"சிந்து ஆற்றங்கரை வாழ்க்கையின் ஞாபகங்கள் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தாண்டியும் அவர்களின் நெஞ்சில் இருந்து மறையவில்லை. சிந்துவின் மதிரய்யை இங்கே உருவாக்கினார்கள். அதேபோல் சுட்ட செங்கற்களால் வீடுகள், ஆலைகள், சுற்றுச்சுவர்கள், உறைகிணறுகள், வாய்க்கால்கள், கழிப்பறைகள், குளிப்பிடங்கள் போன்றவற்றையும் உருவாக்கினார்கள். ஒவ்வொன்றையும் அவர்கள் கட்டி முடித்த போது அவர்கள் சிந்து ஆறு இருந்த வட திசையை வணங்கினார்கள். அவர்களுடைய அறிவுத்திறனும் தொழில்நுட்பத் திறனும் மிக விரைவில் மதுரை என்ற மகத்தான நகரை உருவாக்கியது."9 என்று உதயசங்கர் தனது கதையில் கட்டிடக்கலை பற்றிக் கூறுகின்றார்.

மேலும் மா.இராசமாணிக்கனார் சிந்துவெளி கட்டிடக்கலை பற்றிக் குறிப்பிடும் பொழுது"ஒவ்வொரு இல்லத்திலும் நீராட தனி அறை இருக்கின்றது என்று கூறுகின்றார். மாளிகைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட நீராடும் அறைகள் இருக்கின்றன அவை தெருப் பக்கம் அமைந்துள்ளன. அவற்றிலிருந்து கழிவு நீர் ஓட வடிகால்கள் நன்முறையில் அமைந்துள்ளன."[10] என்று குறிப்பிடுவதனால் தொல்லியல் சார்ந்த சிந்தனைகள் 'ஆதனின் பொம்மை' கதையில் காண முடிகிறது.

**முடிவுரை**

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களுக்குப் பல்வேறு சிந்தனைகளை எடுத்துரைத்தாலும், தொல்லியல் சார்ந்த வரலாற்றுச் சிந்தனைகளைக் கதைகளில் பதிவு செய்துள்ளதை அறிய முடிகின்றது. இக்கதைகளை சிறார்கள் படிக்கின்ற பொழுது பழங்கால மக்களின் மொழி, இனம், பண்பாடு, வரலாறு, கட்டிடக்கலை, நாகரிகம், தொன்மம், வணிகம் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்கிறார்கள். மேலும் தம் முன்னோர்கள் கடைப்பிடித்த வாழ்வியலையும், ஒழுக்கங்களையும், சமத்துவத்தையும் தமது வாழ்வியலிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று தாம் வளர்ந்து வந்த வரலாற்றினை அறிந்து கொள்வதற்காகவும் குழந்தை இலக்கிய எழுத்தாளர் உதய சங்கர் தனது"ஆதனின் பொம்மை"எனும் சிறுகதையின் மூலம் தொல்லியல் சார்ந்த சிந்தனைகளை எடுத்துரைக்கின்றார். ஆதனின் பொம்மை என்ற இச் சிறுகதை வெறும் குழந்தையின் பொம்மையைப் பற்றிய கதையல்ல. அது பழந்தமிழர் வாழ்வோடு பொருந்திய பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் தொல்லியல் கூறுகளாக அமைந்துள்ளன என்பதனை அறிய முடிகின்றது.

**சான்றெண்விளக்கம்**

1. வீரமாமுனிவர். சதுரகராதி.ப.எ.75.
2. தொல்காப்பியம். தொல்காப்பியர்.நூ.ப.229

**DOI: https://doi.org/10.63300/tm12032026.21**

3. உதயசங்கர். ஆதனின் பொம்மை.ப.எ.44,45.
4. மொகஞ்சதாரோ சிந்துவெளி நாகரிகம்.மா.இராசமாணிக்கம்.277.
5. உதயசங்கர், ஆதனின் பொம்மை.ப.எ.39.
6. திருக்குறள், திருவள்ளுவர்.கு.எ.972.
7. உதயசங்கர், ஆதனின் பொம்மை.ப.எ.52.
8. மொகஞ்சதாரோ சிந்துவெளி நாகரிகம், மா.இராசமாணிக்கம்.ப.எ.158.
9. உதயசங்கர், ஆதனின் பொம்மை.ப.எ.90.
10. மொகஞ்சதாரோ சிந்துவெளி நாகரிகம், மா.இராசமாணிக்கம்.ப.எ.72.

**துணை நூற்பட்டியல்**:

[1.] இராசமாணிக்கம்.மா -மொகஞ்சதாரோ சிந்துவெளி நாகரிகம்,1907 The south indian saiva Siddhanta works publishing society. கழக வெளியீடு-302, இறுதி பதிப்பு 1999.

[2.] உதயசங்கர்-ஆதனின் பொம்மை, வானம் பதிப்பகம், சென்னை. நான்காம் பதிப்பு ஜூலை-2023.

[3.] திருவள்ளுவர், திருக்குறள், குறள் எண் 972.எம்.சிவசுப்பிரமணியன், கமர்சியல் பப்ளிகேசன்ஸ், சிவகாசி, ஜனவரி 2017.

[4.] வீரமாமுனிவர்-சதுரகராதி, முனைவர்சு. இன்னாசி, சத்தியா பதிப்பகம், சென்னை. டிசம்பர்-2005.

## ஆசிரியர் கருத்து முரண்பாடின்மை அறிக்கை (Author Declaration of Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையை உருவாக்குவதிலும், தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதிலும், முடிவுகளை வெளியிடுவதிலும் எவ்வித நிதி சார்ந்தோ அல்லது தனிநபர் சார்ந்தோ கருத்து முரண்பாடுகள் (Conflict of Interest) எதுவும் இல்லை என ஆசிரியர் இதன்மூலம் உறுதியளிக்கிறார்.